**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM.**
**RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.84 & 85 /2024 - PW- 9**

| | |
|---|---|
| Name | திரு. கலைவாணன் |
| Husband/Father Name | ஏகாம்பரம் |
| Village /Area | மேச்சேரி |
| Taluk | ஆற்காடு |
| Occupation | கிராம நிர்வாக அலுவலர் |
| Age | 42 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 07.08.2025.

**(எதிரிகள் ஆஜர் ).**

**முதல் விசாரணை :**

நான் தற்போது அரக்கோணம் வட்டம் அரிகில் பாடி கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 2021–ம் ஆண்டு நான் பள்ளூர் கிராம நிர்வாக அலுவலராக இருந்த போது காவல் துறையில் இருந்து காலை சுமார் 05.00 முதல் 05.30 மணியளவில் எங்களுக்கு வந்த அழைப்பின் காரணமாக நானும் என்னுடைய கிராம உதவியாளரும் சேந்தமங்கலம் அரசினர் மேல்நிலைப்பள்ளிக்கு வரசொன்னார்கள். அங்கு நிஷாந்த், திலிப் என்பவர்களை கைது செய்த விசாரணை செய்வதாகவும் அதற்கு சாட்சியாக இருக்க கேட்டுக்கொண்டதற்கிணங்க நாங்களும் உடன் பட்டு முதலில் நிஷாந்த் என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கேட்டு அவர் சொல்ல மடிக்கணிணியில் பதிவு செய்துக்கொண்டார்கள். அதன் பிறகு திலீப் என்பவரிடம் ஒப்புதல் வாக்குமூலம் கேட்டு அவர் சொல்ல

மடிக்கணிணியில் பதிவு செய்துக்கொண்டார்கள். அதை நகலெடுத்து என்னிடம் கையொப்பம் பெற்றார்கள். என்னிடம் காண்பிக்கப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள முதலாவது கையொப்பம் முறையே அதசாஆ.7 மற்றும் அதசாஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் எதிரிகளிடமிருந்து கருப்பு நிற பல்சர் பைக், இரும்பு கத்தி மற்றும் இரத்த கறை படிந்த உடைகள் கைப்பற்றப்பட்டது. என்னிடம் காண்பிக்கப்படும் கைப்பற்றுதல் மகஜரில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையது தான் அது அதசாஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னிடம் காண்பிக்கப்படும் புகைப்படத்தில் உள்ள இருசக்கர வாகனம் தான் என் முன்னிலையில் எதிரிகளிடமிருந்து கைப்பற்றபட்ட இருசக்கர வாகனம் ஆகும். அது சா.பொ. 1 ஆக எதிரிகள் தரப்பு ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது. எதிரிகளிடமிருந்த கைப்பற்றிய கத்தி நீதிமன்றத்தில் என்னிடம் காண்பிக்கப்படும் கத்தியில் இரும்பு பூன் மரக்கைப்பிடியுடன் கூடிய பட்டை வடிவிலான கத்தியாகும் அது சா.பொ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. கருநீல நிறத்தில் வெள்ளை பூ போட்ட இரத்த கறை படிந்த முழுக்கை சட்டை ஒன்று அது சாபொ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது மற்றும் என்னிடம் காண்பிக்கப்படும் இரத்த கறை படிந்த கருப்பு நிற உடை இரண்டு, மூன்று இருப்பதால் என்னால் குறிப்பிட்ட சொல்லமுடியவில்லை அன்றயை தினம் எதிரிகள் மேற்படி கருப்பு நிற பேண்ட் அணிந்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்து வாக்குமுலம் பதிவு செய்தார்கள். சம்பவ சமயத்தில் நான் பார்த்தவர்கள் தாடி இல்லமால் இருந்தார்கள் தற்போது தாடியுடன் உள்ளதால் என்னால் சரியாக அடையாளம் காட்ட இயலவில்லை.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

நான் சம்பவ காலத்தில் பள்ளூர் கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தேன். எனது சொந்த ஊர் மேச்சேரி கிராமம் ஆகும். நான் தினமும் மேச்சேரியிலிருந்து தான் வேலைக்கு வருவேன் என்று சொன்னால் சரியல்ல அரக்கோணத்தில் வீடு எடுத்து தங்கியுள்ளேன். அந்த விவரத்தை வழக்கு சம்பந்தமாக வேறு எங்காவது கூறியுள்ளேனா என்றால் இல்லை. சம்பவ காலத்தில் கிராம உதவியாளர் சேந்த மங்களலத்தில் தங்கியிருந்தார். அரக்கோணத்திலிருந்து சம்பவ இடத்திற்கு செல்ல வேண்டுமென்றால் 25 நிமிடத்தில் செல்லலாம். நான் அரக்கோணத்தில் வீடு எடுத்து தங்குவதற்கு அரசாங்கம் அனுமதி கொடுத்துள்ளாத என்றால் இல்லை. சாட்சி தாமாக ஒரு குறிப்பிட்ட கி.மீ க்குள் தங்கியிருக்கலாம் என்று அரசாணை உள்ளதாக கூறினார். அந்த அரசாணை எண் மற்றும் தேதி என்னால் கூறமுடியாமா என்றால் எனக்கு தற்போது தெரியவில்லை. அந்த அரசாணையை நான் படித்துள்ளேனா என்றால் இல்லை. சம்பவ தினத்தன்று சம்பவ இடத்திற்கு மாலை 04.00 மணியளவில் சென்றோம். அந்த சமயத்தில் சவம் சம்பவ இடத்தில் இருந்ததா என்றால் ஆம் இருந்தது. அப்போது பொதுமக்கள் சுமார் 50 நபர்கள் இருப்பார்களா என்று சொன்னால் சரிதான். அப்போது போலீசார் இருந்தார்கள் ஆனால் எந்தெந்த அதிகாரிகள் இருந்தார்கள் என்று எனக்கு தெரியவில்லை. போலீசாரிடம் கொலை நடந்தது சம்பந்தமாக தனி அறிக்கை கொடுத்தேனா என்றால் இல்லை. நானும் எனது உதவியாளரும் காவல் நிலையத்திற்கு சென்று தனி அறிக்கை கொடுத்தோமா என்றால் இல்லை. சவம் இருந்த இடத்திற்காகன பட்டா மற்றும் சிட்டா ஆகியவைகளை ஆய்வாளர் என்னிடமிருந்து வாங்கி சென்றார்களா என்றால் இல்லை. சவம் கிடந்த இடத்தின் உரிமையாளரை ஆய்வாளர்

என் முன்னிலையில் விசாரித்தாரா என்றால் இல்லை. சம்பவ இடத்திற்கு அருகே பைபாஸ் சாலையில் இருந்து E.B.அலுவலத்திற்கு செல்லலாம என்றால் செல்லலாம். அங்கு பைபாஸ் கால்வாய் உள்ளது என்றும் அ்தை தாண்டி தான் சமபவ இடத்திற்கு செல்லலாம் என்று சொன்னால் அதை பற்றி எனக்கு நியாபகம் இல்லை. கிராம நிர்வாக அலுவலர் என்ற அடிப்படையில் எனக்கு எந்தெந்த கால்வாய் செல்கிறது என்று தெரியும் என்று சொன்னால் சரிதான். அரக்கோணதிலிருந்து காஞ்சிபுரம் செல்லும் வழியில் 2 கி.மீ தொலைவில் ஒரு வண்டி பாதை உள்ளது என்றும் அதன் வழியாக சென்றால் தான் சம்பவ இடத்திற்கு செல்ல முடியும் என்று சொன்னால் சரியல்ல. 60 மீட்டர் தொலைவில் உள்ளது. அரக்கோணம் காஞ்சிபுரம் வழியில் சேந்தமங்கலம் அரசு பள்ளி தெற்கு திசையை பார்த்தார் போல் உள்ளது. மெயின் ரோட்டிற்கும் பள்ளிக்கும் இடையில் நிறைய கடைகள் உள்ளது என்று சொன்னால் சரிதான். பள்ளி காம்பவுண் 2000 அடி இருக்கும் என்று சொன்னால் இருக்கலாம். அந்த பள்ளிக்கு 2 கேட்கள் உளள்ளது என்று சொன்னால் சரிதான். என்னுடைய சாட்சியத்தில் மேற்படி 2 கேட்களில் எந்த கேட் அருகே என்னைுடிடய சாட்சியத்தை பதிவு செய்தேன் என்று சொன்னால் கூறவில்லை. நீதிமன்றத்தில் காண்பிக்கப்படம் கத்திகளில் எந்தெந்த கத்தியை யார் யாரிடமிருந்து கைப்பற்றினார்கள் என்று கூறவில்லை என்று சொன்னால் சரிதான். அதே போல் நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் துணிகளை யார் யாரடமிருந்து கைப்பற்றினார்கள் என்று நான் கூறவில்லை என்று சொன்னால் சரிதான். நீதிமன்றத்தில் காட்டப்பட்ட துணிகளிலோ அல்லது கத்திகளிலோ இரத்த கறை தற்போது பார்க்க வில்லை என்று சொன்னால் சரிதான் சாபொ.1 பல்சர் என்ற வார்த்தை

இடம் பெறவில்லை என்று சொன்னால் சரிதான். கிராம நிர்வாக அதிகாரி பச்சை மற்றும கருப்பு நிற மையில் கையொப்பம் இடலாமா என்றால் இடக்கூடாது. நான் கையொபபம் இட்டால் முத்திரை இட வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். நான் கருப்பு நிற மையினால் கையொப்பம் இட்ட ஆவணம் எதிலும் முத்திரை இல்லை என்று சொன்னால் சரிதான். நான் மடிக்கணிணியில் தட்டச்சு செய்யப்பட்ட 3 பக்கம் கொண்ட ஆவணங்களில் கையொப்பம் இட்டேன். மடிக்கணிணியின் திரையில் கையொப்பம் இட முடியாது என்று சொன்னால் சரிதான். நான் சொல்ல சொல்ல தான் போலீசார் வாக்குமூலம் மடிக்கணிணியில் பதிவு செய்து என்னிடம் கையொப்பம் வாங்கப்பட்டது. எனக்கு எதிரிகளின் கைது குறித்து தெரியுமா என்றால் தெரியும். அந்த சங்கதியை போலீசார் கூறிதான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அந்த கைது எத்தனை மணிக்கு செய்தார்கள் என்று என்னிடம் கூறிவில்லை என்று சொன்னால் சரிதான். 2 நபர்களிடமிருந்து வாக்குமூலம் வாங்குகிறோம் அதற்கு எங்களை வருமாறு கூறியதன் பேரில் நாங்கள சென்றோம் என்றால் சரிதான். அப்போது தான் எனக்கு இந்த கொலை பற்றிய முழுமையான விவரம் தெரியவந்தது என்று சொன்னால் சரிதான். நான் 3 ஆவணங்களில் கையொப்பம் இட்டதை தவிர வேறெந்த ஆவணத்திலும் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரிதான். நான் போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க முதல் விசாரணையில் பொய்யாக சாட்சி கூறினேன் என்றால் சரியல்ல. கொலை சம்பந்தமாக இறந்தவரின் தாயார் புகார் கொடுத்ததாக தெரியவந்தது. சம்பவ இடத்தில் இறந்தவரின் தாயார், மாமா மற்ற நபர்கள் இருந்தது பற்றி எனக் குதெரியுமா என்றால் கூட்டம் இருந்தது பற்றி தான் தெரியும். சம்பவ

இடத்தில் இரத்த கறை இருந்ததை நான் பார்த்தேனா என்றால் இல்லை. நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(ஒம்./–) திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**